සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව- නැගෙනහිර පළාත
பண்பாட்டலுவல்கள் திணைக்களம் -கிழக்கு மாகாணம்
Department of Cultural Affairs – Eastern Province

| | | | |
|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | EP/37/04/SCO-DB/SOC/06/ 2022 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | |

FACULTY OF ARTS & CULTURE
30 JAN 2024
17050
Eastern Unive

Office of the ... Eastern University
2863
24 JAN 2024

திகதி
දිනය
Date 2024.01.10

...பதிவாளர்...........
கிழக்குப் பல்கலைக்கழகம்
...வந்தாறுமூலை.....

Dean / Arts

அன்புடையீர் !

**கிழக்கு மாகாண உயர் கல்வி நிறுவன மாணவர்களுக்கான பாடல் போட்டி - 2024.**
**(பல்கலைக்கழகங்கள், வளாகங்கள், கல்வியற்கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகள் )**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கின்ற இருமொழி (தமிழ், சிங்கள) மாணவர்களின் பல்துறைசார் திறனை (பாடுந்திறனை) வெளியுலகிற்கு எடுத்துக் காட்டும் நோக்கில் முதலாம் ஆண்டு (first year) தொடக்கம் இறுதியாண்டு (final year) வரை கல்வி கற்கும் மாணவர்களிடையே பாடல் போட்டியை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

AR/FAC
Pls circulate among the students
V. [illegible]
31/01/2024

❖ பூரணப்படுத்தப்பட்ட விண்ணங்கள் யாவும்

மாகாணப்பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.
கிழக்கு மாகாணம்
திருகோணலை.

என்ற முகவரிக்கு 2024.02.20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் போட்டி தொடர்பான சுற்றுநிருபத்தினை தங்கள் நிறுவனத்தின் கல்வி கற்கின்ற சகல மாணவர்களும் அறிந்து கொள்ளும் பொருட்டு விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்ததி இப் போட்டியை சிறப்புற நடாத்துவதற்கு தங்கள் ஒத்துழைப்பை வழங்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ் விடயத்தில் தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பு பெரிதும் மதிக்கப்படுகின்றது.

AC/03
pl. circulate
31/1/24

ச.நவநீதன்
மாகாண பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

ச. நவநீதன்
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.

பிரதி :- திரு.R. [illegible]... கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், ...ஏறாவூர்...
உரிய கல்வி நிறுவனத்திற்கு நேரடியாக சென்று இப் போட்டியை வினைத்திறனுடன் நடத்துவதற்கான உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைக்காக.

අධ්‍යාපන,තොරතුරු තාක්ෂණ අධ්‍යාපන,පෙරපාසල් අධ්‍යාපන,ක්‍රීඩා,සංස්කෘතික කටයුතු, යෞවන කටයුතු, පුනරුත්ථාපන හා නැවත පදිංචිකිරීමේ අමාත්‍යාංශය,ඕර්ස් හිල්,ත්‍රිකුණාමලය
கல்வி,தகவல் தொழில்நுட்பக்கல்வி,முன்பள்ளிக்கல்வி,விளையாட்டு,பண்பாட்டலுவல்கள்,இளைஞர் விவகாரம்,புனர்வாழ்வுமற்றும் மீள்குடியேற்றஅமைச்சு,உவர்மலை, திருகோணமலை
Ministry of Education,Information Technology Education,Pre School Education,Sports,Cultural Affairs,Youth Affairs,Rehabilitation & Resettlement, Orr's hill,Trincomalee.
Gen:0262220036 Fax: 0262220036 Provincial Director: [illegible]

கிழக்கு மாகாண உயர் கல்வி நிறுவன மாணவர்களுக்கான பாடல் போட்டி - 2024.
(பல்கலைக்கழகங்கள், வளாகங்கள், கல்வியற்கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகள் )
( போட்டியாளர்களுக்கான அறிவுறுத்தல்கள் )

❖ போட்டியின் நோக்கம்:

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021ஆம் ஆண்டில் இருந்து வருடந்தோறும், கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களின் பல்துறைசார் திறனை வெளிப்படுத்தும் நோக்கில் பாடல் போட்டியை இருமொழிகளிலும் (தமிழ், சிங்கள) நடத்தி வருகின்றது. இப்போட்டியானது திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் மாவட்ட மட்ட போட்டியாகவும் நடத்தப்பட்டு, அதில் தெரிவு செய்யப்படும் போட்டியாளர்களுக்கு மாகாண மட்டத்திலும் பாடல் போட்டிகளை நடத்தி வெற்றியாளர்களை கௌரவித்து வருகின்றது.

இந்நிலையில் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பின்வரும் உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கின்ற இருமொழி (தமிழ், சிங்கள) மாணவர்களின் பல்துறைசார் திறனை (பாடுந்திறனை) வெளியுலகிற்கு எடுத்துக் காட்டும் நோக்கில் முதலாம் ஆண்டு (first year) தொடக்கம் இறுதியாண்டு (final year) வரை கல்வி கற்கும் மாணவர்களிடையே பாடல் போட்டியை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்றுவதற்கு தேர்தெடுக்கப்பட்டடுள்ள தகுதியான கல்வி நிறுவனங்கள்

- அம்பாறை மாவட்டம் :
  1) தென்கிழக்குப் பல்கலைக்கழகம் - ஒலுவில்,
  2) கல்வியற்கல்லூரி - அட்டாளைச்சேனை,
  3) ஆசிரிய பயிற்சிக் கலாசாலை - அட்டாளைச்சேனை,
- மட்டக்களப்பு மாவட்டம்:
  1) கிழக்கு பல்கலைக்கழகம் வந்தாறுமுலை - செங்கலடி.
  2) சுவாமி விபுலானந்தா அழகியற் கல்லூரி - கல்லடி. (சங்கீத(வாய்பாடு) பாடத்தை துறைரீதியாக கற்கும் மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றுவதை தவிர்த்துக் கொள்ளவும் )
  3) கல்வியற் கல்லூரி - தாழங்குடா,
  4) ஆசிரிய பயிற்சிக் கலாசாலை - மட்டக்களப்பு.
- திருகோணமலை மாவட்டம்:
  1) திருகோணமலை வளாகம் - கோணேசபுரி

❖ பூரணப்படுத்தப்பட்ட விண்ணங்கள் யாவும்

மாகாணப்பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.
கிழக்கு மாகாணம்
திருகோணலை.
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

❖ **விண்ணப்ப முடிவுத்திகதி** : 2024.02.20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பில் திணைக்களம் பொறுப்புகூறமாட்டாது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

போட்டிகள்: போட்டிகள் யாவும் பின்வரும் முறையில் நடத்தப்படும்.

- முதலாவது போட்டி - நிறுவன ரீதியாக நடைபெறும் ( மாவட்டம் )
- இறுதிப்போட்டி - மாகாண மட்டம்.

(குறித்த நிறுவனத்தில், மாவட்டத்தில் இருந்து கிடைக்கும் விண்ணப்பங்களின் அடிப்டையில், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளரினால், மாவட்ட மற்றும் மாகாண போட்டிகள் நடைபெறும் இடம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் )

- நிறுவன ரீதியான (மாவட்ட) மற்றும் மாகாண ரீதியிலான போட்டிகள் யாவும் நேரடியாகவே நடைபெறும்.
- போட்டிகளுக்கு விண்ணப்பம் செய்யும் நாளில் இருந்து போட்டிக்கு தயாராதல் வேண்டும்.
- போட்டி நடைபெறும் திகதிக்கு ஒரு வார காலத்திற்கு முன் போட்டி நடைபெறும் திகதி, மற்றும் இடம் அறியத்தரப்படும்.
- மேலதிக விபரங்களுக்கு 026-2220036 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளலாம்.

- பின்வரும் அடிப்படையில் போட்டிக்கான புள்ளிகள் வழங்கப்படும்:
  1. சுருதி- லயம்- தாளம் - 20 புள்ளிகள்
  2. இசையோடு ஒன்றித்துப்பாடுதல் - 20 புள்ளிகள்
  3. தெளிவான உச்சரிப்பு - 20 புள்ளிகள்
  4. சிறந்த குரல்வளம் - 20 புள்ளிகள்
  5. உடல்மொழி(bodylanguage),ஒப்பனை,உடையலங்காரம்,தோற்றவெளிப்பாடு (Appearance) - 20 புள்ளிகள்

  ( மொத்தம் - 100 புள்ளிகள் )

- தாங்கள் விரும்பும் இரு பாடல்களைத் தெரிவு செய்து போட்டி நடைபெறும் நாளில் பாடல் வரிகளற்ற **karaoke** இசைவடிவத்தை விரலியில் (Pen drive) கொண்டு வந்து போட்டி இடம்பெறுவதற்கு பத்து (10) நிமிடங்களுக்கு முன்னர் ஏற்பாட்டாளர்களிடம் கையளித்தல் வேண்டும்.

- பாடல் வரிகளை மனனம் செய்து பாடுதல் வேண்டும் என்பதுடன், பார்த்துப்பாடுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

ச.நவநீதன்
மாகாணப்பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.

# கிழக்கு மாகாண உயர் கல்வி நிறுவனங்களில் கற்றலில் ஈடுபடும் மாணவர்களுக்கான பாடல் போட்டி - 2024.

| | |
|---|---|
| 1) முழுப்பெயர்:(தமிழ்) | |
| 2) Full Name : (Capital Letters Eng) | |
| 3) நிரந்தர முகவரி: | |
| 4) கல்விகற்கும் துறை | |
| 5) கல்விகற்கும் நிறுவனம் | |
| 6)நிறுவனத்தின் முகவரி: | |
| 7) தொலைபேசி இல: (தனிப்பட்ட) | |
| 8) Whatsapp இல | |
| 9) அமைந்துள்ள பிரதேச செயலகம் | |
| 10) விண்ணப்பிக்கும் மாவட்டம்: | |

12) தெரிவு செய்யப்பட்ட பாடல்கள்:

| | |
|---|---|
| 1 | |
| 2 | |

மேலே குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் என் அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானவை என்பதை தெரிவித்துக் கொள்வதோடு, தவறான தகவல்கள் ஏதும் வழங்கப்பட்டமை, கண்டுபிடிக்கப்பட்டால் எடுக்கப்படும் முடிவுகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்பதையும் தங்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

.......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

......................
திகதி